# THE CONTRIBUTION OF MUSLIM SCHOOLS TO THE IMPLEMENTATION OF VALUE EDUCATION IN AMPARA DISTRICT :- A COMPARATIVE STUDY BETWEEN THE STATE SCHOOL AND THE MODEL SCHOOL

MCS.Shathifa[1], MY. Minnathul Suheera[2]

[1]விரிவுரையாளர், அறபு மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்.ummunidhaoluvil@gmail.com

[2]விரிவுரையாளர், அறபு மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்.suheesafeek@gmail.com

**ABSTRACT:** Value education is the key to bring about reformation in the society. At present the family, private and government institutions provide value education to students. However, there is deterioration of values in society, especially among the children of Sri Lanka. School is the main agent that provides a platform to build values among the school population.The paper aims to study compares the existing value education in state and model schools, evaluates the reason for such value education and also proposes strategies that can be adopted at Muslim schools in Ampara district. The methodology used is mixed approach. The primary data has been collected through questionnaire, interview and observation from two state school and one model private school in Kalmunai. The findings reveal that the value action plan for value education of state school does not meet the standard of the private model school. The value expression reflected in the students of the private model school is better than the students of the state school.If the parents ,family and school follow the action plan implemented by the private school, in taking a collective effort and responsibility to uphold value education, it can have positive impact to reform the future generation of our society.

Key words: Value education, value attainment, Schools, Students.

## ஆய்வின் அறிமுகம்

சமூகம் பல்வேறு ஆழுமையுள்ள உறுப்பினர்களைக் கொண்டியங்குகின்றது. சமூகத்தை வளப்படுத்துவதில் சமூக நிறுவனங்களால் வழங்கப்படும் கல்வி பிரதான இடம் வகிக்கின்றது. கல்வி, தனிமனிதரிடையே சிக்கலான சமூக ஒழுங்கில் தமது செயற்பாடுகளை அடைந்து கொள்வதற்கும், தன்னை விருத்தி செய்வதற்கும் , நிலைப்படுத்துவதற்கும் உதவுகின்றது. குறிப்பாக கல்வியின் சிறந்த நோக்கத்தை அடைந்து கொள்ள பாடசலையில் வழங்கப்படும் விழுமியக் கல்வி பலமான ஒரு ஊடகமாகத் தொழிற்படுவதனை ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. இவ்வகையில் ஒருவரின் வாழ்விலுள்ள கலாச்சாரப் பெறுமானம், தனியாள் பெறுமானம், ஒழுக்கப் பெறுமானம், சமூகப் பெறுமானம் போன்றவற்றை உயர்வாக ஏற்றுக் கொள்ள விழுமியம்சார் கல்வி துணை செய்கின்றது.

சமூகத்தில் பிள்ளைககள் பிறக்கின்ற போது பலவகைப்பட்ட ஆற்றல்களுடன் பிறக்கின்றார்கள். எதிர்காலத்தில் இவர்களைப் பெறுமதி மிக்க பிரஜைகளாக்குவதில் அவர்களுக்குக் கிடைக்கும் விழுமியக்கல்வி பிரதான இடம் வகிக்கின்றது.நீண்டகாலப் பரப்பைக்கெண்ட பாடசாலைப் பருவத்தில், இவர்கள் பெற்றுக் கொள்ளும் அடைவுகள் அவர்களின் பிற்கால வாழ்வில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றது.

பிள்ளைகளை நற்பிரஜைகளாக உருவாக்குவதில் குடும்பம், பாடசாலை போன்ற சமூக நிறுவனங்கள் பங்களிப்பு செலுத்தி வருகின்றன. குறிப்பாகப்பாடசாலைகள் பிள்ளைகளைச் சமூகமயப்படுத்துவதில் பல செயற்திட்டங்களை அமுற்படுத்தி வருகின்றன. இருப்பினும் தற்காலத்தில் அவதானிக்கும் போது பாடசாலைகளில் மாணவர்களிடையே தனிநபர் ஒழுக்க விழுமியங்கள், சமூக விழிமியங்கள் பின்னடைந்து வருவதனைக் காணக் கூடியதாகவுள்ளது.*"பல பாடசாலைகளில் தற்போதுள்ள பாடத்திட்டத்தில்( Curriculum)தர்க்க ரீதியான அடிப்படையில் உறுதியாகத் திட்டமிடப்பட்ட விழுமிய முறைகள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை"*( பாலசூரிய,1999). இன்றுஉலகக்கல்வியில் ஏற்பட்டுள்ள அதிக நாட்டங்களும் ,ஈடுபாடும் ஏனைய விழுமியங்களைப் புறந்தள்ளியுள்ளன. கடந்த ஒரு தசாப்தங்களுக்குள் ஏற்பட்டுள்ள பல்வேறு மாற்றங்கள் கல்வியினை ஒரு நுகர்வுப் பொருளாகவும், உழைக்கும் கருவியாகவும் மாற்றியுள்ளது. இதனை மையப்படுத்தியதாகவேஇன்றைய பாடசாலைகளின் நடவடிக்கைகள்காணப்படுகின்றன. அதேபோல்

பாடசாலைகளும் ,குடும்பங்களும் அதிக பணத்தையும், நேரத்தையும் இதற்காக செலவிட்டு வருகின்றன.இதன் விளைவாக மாணவர்களின் கல்வி அடைவுகள் உயர்வடைந்து வரினும், மாவர்களின் தனிநபர்ஆழுமை, சமூக ஆழுமை, விழுமியங்கள், சிறந்த பண்பாட்டு நடத்தைக் கோலங்கள் பின்தள்ளப்பட்டுள்ளது. *“புராதன மரபுமுறைக் கல்வியில் ,விழுமியங்களைக் கற்பித்தல் முக்கியமான இடத்தை வகித்தது. ஆயினும் தற்போது மேற்குலக லௌஹீகவாதக் கருத்தக்கள்(Materialismideology ),பொருள்சார் கலாச்சாரம்( material Culture)காரணமாக சமூகத்தில் விழுமியங்கள் வீழ்ச்சியடைந்து செல்கின்றது.(பாலசூரிய,1999)*

இன்றைய பிள்ளைகள் எதிர்காலசமூகத்தின் அச்சாணியாக உள்ளமையினால் வெறுமனே உலகாய நோக்கை மாத்திரம் மையப்படுத்திய கல்விக்கான போட்டியில் கலந்து அதனை அடைய முனைவதனால் சமூகத்தில் மானிட விழுமியங்களை உருவாக்க முடியாது போகும் நிலை எதிர்காலத்தில் உருவாகலாம்.

விழுமியங்கள் தனியாக ஒருவரை மதிப்பிடும் ஒன்றல்ல. அது தனியாளை,சமூகத்தை , வாழ்க்கையைச் செழுமைப்படுத்துகின்ற, வளப்படுத்துகின்ற. பெறுமதியாக்குகின்ற மனிதப் பண்பாகும். இது நல்லொழுக்கக் கற்றலின் பகுதியாகும். கற்றல் செயன்முறையினூடாகவே ஒருவரை இது வந்தடைகின்றது.

சிறந்த சமூகப் பிரஜையை உருவாக்குவதில் பாடசாலை மிகுந்த செல்வாக்குப் பெறுகின்றது.‘‘பாடசாலைகளால் விழுமியக் கல்வி வழங்கப்படும் போது, அது மாணவர்களிடம் நல்ல பயனுள்ள வாழ்க்கைத் தத்தவத்தை கட்டியெழுப்பி செயற்பட வைக்கும். குறிப்பாக கட்டிளமைப் பருவத்தில் இவர்களை நல்ல , கெட்டவைகளை வேறுபடுத்தவதற்கும், சிறந்த வாழ்க்கைத் தத்துவத்தைத் தேடுவதற்கும் வழிகாட்டும்’’. (பிறீட்ஸ் ,வில்லியம் ,1970)

எனவே இத்தகைய மானிட விழுமியங்களை உருவாக்க இலங்கையில் பல நிறுவன அமைப்புக்கள் பல செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. அவற்றுள் தனியார் பாடசாலைகள், அரச பாடசாலைகள் பெரும் வகிபங்கினை வகித்து வருகின்றன.

இத்தோற்றப்பாட்டினை அம்பாரை மாவட்டத்திலும் காணமுடிகின்றது. அம்பாரை மாவட்டம் பெரும்பான்மையாக முஸ்லிம்களைக் கொண்ட பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் அரச பாடசாலைகள், தனியார் பாடசாலைகள் போன்றன, இஸ்லாமிய கலாச்சார அம்சங்களுடனான சூழலில் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன. இப்பாடசாலைகளில் விழுமியக் கல்வி ஆரம்பப் பிரிவுமுதல் வழங்கப்பட்டு வருகின்றபோதிலும், மாணவர்களின் நடத்தைகளில் அதன் வெளிப்பாட்டைக் காணமுடியாதுள்ளது.

அதேவேளை ,இப்பிரதேசத்தில் எதிர்காலத்தில் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்காக இஸ்லாமியப் பண்பாட்டில் அக்கறை கொண்ட பல தனியார் அமைப்புக்கள் பாடசாலைகளை உருவாக்கி அதனூடாக உலகக் கல்வியுடன் இணைந்த விழுமியக் கல்வியினை வழங்கி வருகின்றது.

எனவே இவ்வாய்வானது அரச பாடசாலைகளாலும், தனியார் பாடசாலைகளாலும் வழங்கப்பட்டு வருகின்ற கல்வியில் விழிமியம் சார் விடயங்களை, மாணவர் அடைவினை மதிப்பீடு செய்வதனைநோக்காக் கொண்டுள்ளது.இந்த வகையில் கல்முனைப் பிரதேசத்தில் காணப்படுகின்ற மாணவர்களின் விழுமியம்சார் நடத்தைகளைக் சமூகமயப்படுத்துகின்ற செயற்திட்டங்களை முன்னெடுத்து வரும் அரச பாடசாலைகளையும் , தனியார் பாடசாலைகளையும் ஒப்பிட்டு ஆராய முற்படுகின்றது.

**ஆய்வின் இலக்கு:**

1. அரச பாடசாலைகளும் , தனியார் பாடசாலைகளும் முன்னெடுத்து வருகின்ற விழுமியக் கல்விச் செயற்திட்டங்களை ஒப்பிடுதல்.
2. அரச படசாலைகளிலும், தனியார் பாடசாலைகளிலும் கல்வி பயிலும் மாணவர்களின் விழுமியங்களை மதிப்பிடல், அதற்கான காரணங்களைக் கண்டறிதல்.
3. விழுமியங்களைக் கட்டியெழுப்புவதில் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கான உபாயங்களை முன்வைத்தல்.

**ஆய்வுப் பிரச்சினை:**
விழுமியக் கல்வியினை வழங்குவதற்காக இப்பிரதேசத்திலுள்ள முஸ்லிம் பாடசாலைகளினால் முன்னெடுக்கப்படும் செயற்திட்டங்கள் உரிய அடைவினைவழங்கவில்லை.எனவே இவற்றை நிவர்த்திசெய்வதற்காக வெற்றிகரமான செயற்திட்டங்களை அடையாளப்படுத்த இவ்வாய்வு முனைகின்றது.

**ஆய்வுப் பிரதேசம்:**
மேற்குறித்த பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்காக கல்முனைப் பிரதேசத்தில் காணப்படுகின்ற இண்டு அரச பாடசாலைகளும், முன்மாதிரித் தனியார் பாடசாலையும்(பாடசாலைக் கல்வியையும் விழுமியக் கல்வியையும் ஒருங்கே வழங்குகின்ற) மாதிரிகளாகத் தெரிவு செய்யப்படுகின்றன. செயற்பாட்டு விளைவுகளைக் கண்டறிவதற்காக மேற்குறித்த பாடசாலைகளில் கல்வி பயிலும் 03-05ம் வகுப்புக்குட்பட்ட மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றார்கள்.

**ஆய்வு முறையியல்:**
இவ்வாய்வானது முதற்தர , இரண்டாம் தர தரவுகளை உள்ளடகி, தரம்சார், பண்புசார் ஒப்பீட்டு ஆய்வு முறைமையினைப் பயன்படுத்கின்றது. இதில் முதலாம் நிலைத் தரவுகள் வினாக் கொத்து , நேர்காணல், பங்குபற்றல் அவதானம் மூலம் பெறப்படுகின்றது.
இரண்டாம் நிலைத் தரவுகள் ஆய்வுக் கட்டுரைகள், புள்ளி விபரங்கள், நூல்கள் மூலம் பெறப்படுகின்றன.
மேற்குறித்த ஆய்விற்காக குறித்த 03 பாடசாலைகளிலிருந்தும் தரம் 03 முதல் 05 வரையான பிரிவில் 60 மாணவர்கள் வீதம்மாதிரியாகத் தெரிவு செய்யப்படுகின்றனர்.
வினாக் கொத்து, மாணவர்களின் நடத்தைகள் தொடர்பான 30 வினாக்களை உள்ளடக்கியுள்ளது.
அதேபோல 180 மாணவர்களின்குடும்ப உறுப்பினர்கள் நேர்காணலில் பங்கு கொள்கின்றனர்.

பங்குபற்றல் அவதானம் 03 பாடசாலைகளிலும் , மாணவர்களின் வீட்டுச் சூழலிலும் மேற்கொள்ளப்படுகின்றது
பாடசாலைகளின் விழுமியம்சார் செயற்திட்டங்களை ஒப்பிடுவதற்காக தரக்கணிப்பீட்டு அளவிடை, நேர்காணல் பயன்படுத்தப்படுகின்றது.

**இலக்கிய மீளாய்வு:**

'கல்வி','விழுமியம்' என்பனவற்றின் அர்த்தம் பல வடிவங்களில் கல்வி நிறுவனங்களால் முன்வைக்கப்படுகின்றது. கல்வி என்பது பாடத்திட்டம், முறைகள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. கல்வி, விழுயமியங்களுடன் இணைந்து இயங்கும் போது சமூகத்தில் மாணவர்களின் நடத்தை , மனப்பாங்குகளில் சாதகமான விளைவுகளைக் கொடுத்திருப்பதனை சமூக, பொருளாதார, உளவியல்,கல்வி ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன.

Prof. Terry Lovat and clement , 2009 ல் மேற்கொண்ட "விழுமியக் கல்வியின் செல்வாக்கு"தொடர்பான ஆய்வு, நிலையானதும் , பலமானதுமான ஆழுமைகளை மாணவர்களிடம் வடிவமைப்பதிலும் , நடைமுறைப்படுத்துவதிலும் விழுமியக் கல்வி செல்வாக்குச் செலுத்துவதனை வெளிப்படுதியுள்ளது.

விழுமியக் கல்வி பாடசாலைச் சூழலிலும், வெளிச் சூழலிலும் மாணவர்களின் வெளிப்படுத்தும் ஆற்றல், சிறப்பான முறையில் தன்னைக் கையாளும் ஆற்றல்கள் , கலாச்சாரத்துடன் இணைந்த வகையில் மானிட விழுமியங்களை நடைமுறைப்படுத்துகின்ற ஆழுமைகளை உருவாக்ககின்றது. குறிப்பாக இவ் ஆய்வில் தரம் 06, 07ம் தரத்திலிருந்து விழுமியக் கல்வியின் அடைவை மாணவர்களின் நடத்தையில் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. சாந்தமான நடத்தைகள் , சிறந்த தொடர்பாடல் திறன் என்பன அவர்களிடம் அதிகம் காணப்படுகின்றது. உண்மையான உலகம் பற்றிய ஆழமான புரிதல், சுய புரிதல், எல்லா வகையான செயற்பாடுகளிலும் பங்குபற்றல், கல்வியில் உயர் அடைவுகள் என்பன தனிப்பட்ட குணாம்சங்களாக காணப்படுகின்றன என்பதனை இவ்வாய்வு வெளிப்படுத்தியுள்ளது.

பாடசாலைச் சூழலில் ஆசிரியர் மாணவர் தொடர்புகள், சகபாடிகளுடனான தொடர்புகளில் அதிகம் நல்லிணக்கச் சிந்தனைகள் வெளிப்படுத்தப்படுகின்றமையையும் ஆய்வு குறிப்பிடுகின்றது. . நற்பண்புகளுடன் கூடிய நடத்தைகள், அதிகமாக மாணவர்கள் மாணவர்களிடையேயும், ஆசிரியர்களிடையேயும் அதிகமாக மரியாதையினை வெளிப்படுத்தும் பண்புகள் நடைமுறைப்படத்தப்படுவதனை ஆய்வு அவதானித்துள்ளது. சுய வெளிப்பாட்டையும், சுய மதிப்பீட்டையும் அதிகமாக விழுமியக் கல்வி வழங்கியுள்ளது.

இவ்வாய்வு விழிமியத்தை அடிப்படையாகக் கொண்ட நடைமுறைகளைப் பின்பற்றும் பாடசாலைகளை மையப்படுத்தியதாக அமைந்ததுள்ளது.. நியூசிலாந்து அரசு, திட்டமிட்ட வகையில் விழிமியத்தை அடிப்படையாகக் கொண்ட பாடசாலைகளை நடைமுறைப்படத்தியுள்ளது. இப்பாடசாலைகளில்இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டமையால் அதன் பெறுபேறுகளும் பாடசாலையின் இலக்குகளுடன் இணைந்ததாக அமைந்திருந்தது.

Villoro,2009ல் மேற்கொள்ளப்பட்ட ' சமூக விழிமியங்களும் பாடசாலைகளும்'' தொடர்பான ஆய்வில் "பிள்ளைகளுக்கு வழங்கப்படும் கல்வியறிவு , விழிமியம் சார்ந்த கல்வியாக அமையும் போது அது சாதகமான எதிர்கால நலவாழ்விற்கு வழிவகுக்கும் . நாளாந்தம் பாடசாலைகளில் வழங்கப்படும் பயிற்சிகள் மூலமாகவே நிலையான மாற்றங்களை ஒருவரில் விழிமியக் கல்வி ஏற்படுத்தும்''. என்ற முடிவு முன்வைக்கப்பட்டது.

நாளாந்தம் பாடசாலைகளில் வழங்கப்படும் விழுமியம் தொடர்பான கற்றல், பயிற்சிகள், ஆசிரியர் முன்மாதிரிகள் போன்றவைகளே நிலையான விழுமிய அடைவினை ஒருவரில் உருவாக்குகின்றது..

இவ்வாறு வழங்கப்பட்ட விழுமியக் கல்வி ஊடாக சூழலுக்கேற்ற நெகிழ்வான செயன்முறைகள் ஒருவரில் ஏற்படுத்தப்படுவதாகவும், ஒழுக்கம், ஒழுங்கு, சுமூகமான தொடர்பாடல்கள், சூழலிற்கேற்ப வேகமாகவும், ஆராய்ந்தும் தொழிற்படும் தன்மைகளை ஒருவரில் உருவாக்குவதாகவும் ஆய்வு குறிப்பிடுகின்றது.

பாடசாலை மட்டுமல்ல பெற்றோர் - குடும்பப் பங்குபற்றலும் விழுமிய நடத்தைகளை ஒருவரில் நிலைபெறச் செய்வதில் அதிகம் செல்வாக்குச் செலுத்துகின்றது. என்பதனை ஆய்வு முடிவு முன்வைக்கின்றது.

**ஆய்வு மையம்: (தரவுப் பகுப்பய்வும் முடிவுகளும்):**

ஆய்வின் போது பெறப்பட்ட தரவுகளில் அரச, தனியார் பாடசாலைகளின் விழுமியம்சார் செயற்திட்டங்களை ஒப்பிட்டு ஆய்வுசெய்தபோது பின்வரும் முடிவுகள் அடையாளப்படுத்தப்பட்டன.
அரச தனியார் ஆகிய இரண்டு பாடசாலைகளும் விழுமியம்சார் செயற்திட்டங்களை முன்னெடுக்கின்றன. இருந்தபோதிலும், அரச பாடசாலைகளின் பாடத்திட்டத்தில் சமய பாடபோதனை இணைக்கப்பட்டு அதனூடாகவே பொதவாக விழுமியங்கள் போதிக்கப்படுகின்றன. அத்தோடு 5Sஎண்ணக்கருத் திட்டத்தினூடாகவும் விழுமிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனினும் இவை குறித்த இலக்கினை மையப்படுத்திய போதனையாகவும் செயற்பாடுகளாகவும் இன்மையால் வெறுமனே கட்டாயக்கல்வி என்பதற்காகவும் பாடத்திட்டப்பூர்த்தி என்பதற்காகவும் செயற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றது.

எனினும் தனியார் முன்னோடிப் பாடசாலையில் காணப்படும் பாடவிதானம் பாடசாலை பாடத்திட்டத்தோடு விழுமியப் பாடங்களையும்(ஆல்குர்ஆன், ஹதீஸ். சந்தர்ப்ப துஆக்கள்,இஸ்லாமிய அடிப்படை சட்டவிதிகள்,ஸஹாபாக்கள் வரலாறு, இஸ்லாமியக் கதைகள்,வீரத்தியாகிகளின் வாழ்க்கைச் சரித்திரங்கள் போன்றபாடங்களை) கற்கை நெறியாக வழங்குகின்றது.. அதுமட்டுமன்றி நாளாந்த பயிற்சி பாடசாலையாக இயங்கி மாணவர்களால் விழுமியச்செயற்பாடுகள் பின்பற்றப்பட வழியமைத்துக் கொடுக்கின்றது. அத்தோடு விழுமியங்களை கடைப்பிடிக்கும் மாணவர்களை பாராட்டல், பரிசு வழங்கல்( Medals),ஊக்கப்படுத்துகின்றனர். மேலும் மாதாந்த பெற்றார் சந்திப்புக்கள் ஊடாக ஒவ்வொரு மாணவர்களினதும் விழுமியம்சார் செயற்பாடுகள் தனித்தனியாக ஆராயப்பட்டு கலந்துரையாடி முன்னேற்றச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதேபோல் காலை ஆராதனை,வருடாந்த கலை நிகழ்வுகள், நாளாந்த செயற்பாடு பெற்றோரால் வீட்டுச் சூழலில்பிள்ளைகள் கண்கானிக்கப்பட்டு புள்ளி வழங்கல்அட்டவணை நடைமுறை(Evaluation Chart) என்பனவற்றினூடாகவும் விழுமியப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

மேலும் அரச படசாலைகளிலும், தனியார் பாடசாலைகளிலும் கல்வி பயிலும் மாணவர்களின் விழுமியங்களின் வெளிப்பாடுகளைஒப்பிட்டுப்பார்க்கும்போது அரச பாடசாலை மாணவர்களின் விழுமிய வெளிப்பாடு குறைவாகவே உள்ளது. அதேநேரத்தில் மாதிரியாகக் கொண்ட தனியார் பாடசாலை மாணவர்களின் நடத்தைகள் தொடர்த்தேர்ச்சியானதாகவும் முன்மாதிரிமிக்கதாகவும் காணப்படுவதனை அவதானிக்க முடிந்தது.
அதேபோல் பெற்றோர்களினால் பூர்த்தியாக்கப்பட்ட வினாக்கொத்து முடிவுகளும் தனியார் பாடசாலை மாணவர்களின் செயற்பாடுகள் வெற்றிகரமானதாக இருப்பதனை பின்வரும் அட்டவனை காண்பிக்கின்றன.

**மாணவர்களின் விழுமிய வெளிப்பாட்டுப் பகுப்பாய்வு அட்டவணை-1**
அடையாளப்படுத்தப்பட்ட 30 விழுமியப் பண்புகளும் நாளாந்த பழக்க வழக்கங்கள், சமயச் செயற்பாடுகள், உணர்வுடன் தொடர்புடைய செயற்பாடுகள் என மூன்று கூறுகளாகப் பிரிக்கப்பட்டு பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டன.

**பழக்க வழக்கங்கள்**
இதனடிப்படையில் இரண்டு அரச பாடசாலை மாணவர்களது நாளாந்த பழக்க வழக்கங்கள் தொடர்பான விழுமிய அடைவு மட்டம் தனியார் முன்னோடிப் பாடசாலை மாணவர்களின் அடைவுமட்டத்தை விடக் குறைவாக இருப்பதனை பின்வரும் அட்டவணை 01ம் வரைபு (01)ம் எடுத்துக் காட்டுகின்றது.


**சமயம்சார் செயற்பாடுகள்**
இரண்டு அரச பாடசாலை மாணவர்களது சமயம்சார் செயற்பாடுகள் தொடர்பான விழுமிய அடைவு மட்டம் தனியார் முன்னோடிப் பாடசாலை மாணவர்களின் அடைவு மட்டத்தை விடக் குறைவாக இருப்பதனை அட்டவணை 02ம் வரைபு (02)ம் எடுத்துக் காட்டுகின்றது.

**உணர்வுசார் செயற்பாடுகள்**
இரண்டு அரச பாடசாலை மாணவர்களது உணர்வுசார் செயற்பாடுகள் தொடர்பான விழுமிய அடைவு மட்டம் தனியார் முன்னோடிப் பாடசாலை மாணவர்களின் அடைவு மட்டத்தை விடக் குறைவாக இருப்பதனை அட்டவணை 03ம் வரைபு(03)ம் எடுத்துக் காட்டுகின்றது.

***பழக்க வழக்கங்கள்***

| தொ.இல | விழுமியச் செயற்பாடுகள் | தனியார் மாதிரிப் பாடசாலை-மாணவர்கள் | | அரசபாடசாலை-மாணவர்கள் | | அரச பாடசாலை-மாணவர்கள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | | 2 | |
| 1 | சரியான இடத்தில் பொருட்களை வைத்தல் | 35 | 58.30% | 22 | 36.70% | 17 | 28.30% |
| 2 | உடனடியாக உடை மாற்றல் | 43 | 71.70% | 35 | 58.30% | 40 | 66.70% |
| 3 | நேர்த்தி | 42 | 70.00% | 25 | 41.70% | 25 | 41.70% |
| 4 | உடல் சுத்தம் | 48 | 80.00% | 40 | 66.70% | 35 | 58.30% |
| 5 | மரியாதையாக நடத்தல் | 53 | 88.30% | 20 | 33.30% | 15 | 25.00% |
| 6 | பெற்றொர் சொல் கேட்டல் | 41 | 68.30% | 30 | 50.00% | 30 | 50.00% |
| 7 | சுத்தப்படுத்தல் | 52 | 86.70% | 12 | 20.00% | 18 | 30.00% |
| 8 | உரிய இடத்தில்பொருட்களைக் கையாளல் | 40 | 66.70% | 45 | 75.00% | 48 | 80.00% |
| 9 | தொலைக்காட்சி பாராமை | 43 | 71.70% | 6 | 10.00% | 3 | 5% |
| 10 | பொய் சொல்லாமை | 60 | 100% | 2 | 3.30% | 6 | 10% |
| 11 | பாதணிப் பாவனை | 58 | 96.70% | 5 | 8.30% | 7 | 11.70% |
| 12 | தனது பாத்திரம், உடைகளைக் கழுவல் | 58 | 96.70% | 16 | 26.70% | 17 | 28.30% |
| 13 | கவனமாகக் கேட்டல் | 57 | 95.00% | 12 | 20.00% | 53 | 88.30% |
| | **மொத்தம்** | **630** | **80.76%** | **271** | **34.87%** | **314** | **40.25%** |

| **தனியார் பாடசாலை** | **அரச பாடசாலை -1** | **அரச பாடசாலை -2** | **மொத்தம்** |
|---|---|---|---|
| *630* | *272* | *314* | *1216* |
| | | | |
| **51.81%** | **22.37%** | **25.82%** | **100.00%** |




வரைபு – 01

அட்டவணை 02சமயம் சார் செயல்பாடுகள்

| தொ.இல | விழுமியச் செயற்பாடுகள் | மாதிரிப் பாடசாலை-மாணவர்கள் | | அரசபாடசாலை-மாணவர்கள் 1 | | அரச பாடசாலை-மாணவர்கள் 2 | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பிஸ்மியுடன் ஆரம்பித்தல் | 50 | 83.30% | 20 | 33.30% | 15 | 25.00% |
| 2 | ஸலாம் சொல்லல் | 58 | 96.70% | 10 | 16.70% | 12 | 20% |
| 3 | மீட்டல் | 55 | 91.70% | 55 | 91.70% | 55 | 91.70% |
| 5 | சமய நிகழ்வில் பங்கு பெறல் | 48 | 80.00% | 2 | 3.30% | 3 | 5% |
| 6 | சுன்னத்தான உடை அணிதல் | 58 | 96.70% | 12 | 20.00% | 13 | 21.70% |
| 7 | துஆக்களைப் பயன்படுத்தல் | 43 | 71.70% | 2 | 3.30% | 3 | 5.00% |
| 8 | இறைவனை ஞாபகப்படுத்தல் | 40 | 66.70% | 14 | 23.30% | 6 | 10% |
| 9 | தொழுகைக்கு பெற்றோருடன் பயிற்சி எடுத்தல் | 60 | 100% | 3 | 5.00% | 5 | 8.30% |
| | மொத்தம் | 468 | 87% | 128 | 23.70% | 130 | 20.07% |

| தனியார் பாடசாலை | அரச பாடசாலை -1 | அரச பாடசாலை -2 | மொத்தம் |
|---|---|---|---|
| *468* | *128* | *130* | *726* |
| | | | |
| **64.46%** | **17.63%** | **17.91%** | **100.00%** |

வரைபு – 02


**உணர்வுசார்நடத்தைகள்**

| தொ.இல | விழுமியச் செயற்பாடுகள் | மாதிரிப் பாடசாலை-மாணவர்கள் | | அரசபாடசாலை-மாணவர்கள் 1 | | அரச பாடசாலை-மாணவர்கள் 2 | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கருணை | 53 | 88.30% | 25 | 41.70% | 20 | 33.30% |
| 2 | முரண்பாட்டு எண்ணம்.்.் | 40 | 66.70% | 20 | 33.30% | 14 | 23.30% |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | செயற்படாதிருத்தல் | | | | | | |
| 3 | விட்டுக் கொடுப்பு | 47 | 78.30% | 22 | 36.70% | 13 | 21.70% |
| 4 | சமரசம் | 35 | 58.30% | 3 | 5.00% | 1 | 1.70% |
| 5 | மன்னிக்கும் மனோபாவம் | 46 | 76.70% | 2 | 3.30% | 9 | 15.00% |
| 6 | பொருட்களுக்காக சண்டை பொடாதிருத்தல் | 42 | 70.00% | 7 | 11.70% | 4 | 6.70% |
| 7 | வெறுப்பான வார்த்தைப் பிரயோகம் இன்மை | 54 | 90.00% | 20 | 33.30% | 35 | 58.30% |
| 8 | உதவி செய்தல் | 54 | 90.00% | 28 | 46.70% | 22 | 36.70% |
| | | 371 | 72.29% | 127 | 26.45% | 118 | 24.58% |

| தனியார் பாடசாலை | அரச பாடசாலை -1 | அரச பாடசாலை -2 | மொத்தம் |
|---|---|---|---|
| 371 | 127 | 118 | 616 |
| | | | |
| 60.22% | 20.62 % | 19.16% | 100.00 % |

வரைபு – 03





மாணவர்களின் விழுமிய வெளிப்பாட்டுப் பகுப்பாய்வு அட்டவணை – 03

| தொ.இல | விழுமியச் செயற்பாடுகள் | மாதிரிப் பாடசாலை- மாணவர்கள் | | அரசபாடசாலை- மாணவர்கள் | | அரச பாடசாலை- மாணவர்கள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | | 2 | |
| 1 | பிஸ்மியுடன் ஆரம்பித்தல் | 50 | 83.3% | 20 | 33.3% | 15 | 25.0% |
| 2 | ஸலாம் சொல்லல் | 58 | 96.7% | 10 | 16.7% | 12 | 20% |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | சரியான இடத்தில் பொருட்களை வைத்தல் | 35 | 58.3% | 22 | 36.7% | 17 | 28.3% |
| 4 | உடனடியாக உடை மாற்றல் | 43 | 71.7% | 35 | 58.3% | 40 | 66.7% |
| 5 | நேர்த்தி | 42 | 70.0% | 25 | 41.7% | 25 | 41.7% |
| 6 | உடல் சுத்தம் | 48 | 80.0% | 40 | 66.7% | 35 | 58.3% |
| 7 | மரியாதையாக நடத்தல் | 53 | 88.3% | 20 | 33.3% | 15 | 25.0% |
| 8 | பெற்றொர் சொல் கேட்டல் | 41 | 68.3% | 30 | 50.0% | 30 | 50.0% |
| 9 | சுத்தப்படுத்தல் | 52 | 86.7% | 12 | 20.0% | 18 | 30.0% |
| 10 | உரிய இடத்தில்பொருட்களைக் கையாளல் | 40 | 66.7% | 45 | 75.0% | 48 | 80.0% |
| 11 | வெறுப்பான வார்த்தைப் பிரயோகம் இன்மை | 54 | 90.0% | 20 | 33.3% | 35 | 58.3% |
| 12 | கவனமாகக் கேட்டல் | 57 | 95.0% | 12 | 20.0% | 53 | 88.3% |
| 13 | உதவி செய்தல் | 54 | 90.0% | 28 | 46.7% | 22 | 36.7% |
| 14 | மீட்டல் | 55 | 91.7% | 55 | 91.7% | 55 | 91.7% |
| 15 | குர்ஆன் ஓதல் | 56 | 93.3% | 10 | 16.7% | 18 | 30% |
| 16 | சமய நிகழ்வில் பங்கு பெறல் | 48 | 80.0% | 2 | 3.3% | 3 | 5% |
| 17 | கருணை | 53 | 88.3% | 25 | 41.7% | 20 | 33.3% |
| 18 | முரண்பாட்டு எண்ணம்/ செயற்படாதிருத்தல் | 40 | 66.7% | 20 | 33.3% | 14 | 23.3% |
| 19 | விட்டுக் கொடுப்பு | 47 | 78.3% | 22 | 36.7% | 13 | 21.7% |
| 20 | தனது பாத்திரம், உடைகளைக் கழுவல் | 58 | 96.7% | 16 | 26.7% | 17 | 28.3% |
| 21 | சுன்னத்தான உடை அணிதல் | 58 | 96.7% | 12 | 20.0% | 13 | 21.7% |
| 22 | பாதணிப் பாவனை | 58 | 96.7% | 5 | 8.3% | 7 | 11.7% |
| 23 | துஆக்களைப் பயன்படுத்தல் | 43 | 71.7% | 2 | 3.3% | 3 | 5.0% |
| 24 | இறைவனை ஞாபகப்படுத்தல் | 40 | 66.7% | 14 | 23.3% | 6 | 10% |
| 25 | சமரசம் | 35 | 58.3% | 3 | 5.0% | 1 | 1.7% |
| 26 | மன்னிக்கும் மனோபாவம் | 46 | 76.7% | 2 | 3.3% | 9 | 15.0% |
| 27 | பொருட்களுக்காக சண்டை பொடாதிருத்தல் | 42 | 70.0% | 7 | 11.7% | 4 | 6.7% |
| 28 | தொலைக்காட்சி பாராமை | 43 | 71.7% | 6 | 10.0% | 3 | 5% |
| 29 | பொய் சொல்லாமை | 60 | 100% | 2 | 3.3% | 6 | 10% |
| 30 | தொழுகைக்கு பெற்றோருடன் பயிற்சி எடுத்தல் | 60 | 100% | 3 | 5.0% | 5 | 8.3% |
| | **மொத்தம்** | **1469** | **81.6%** | **525** | **29.2%** | **562** | **31.2%** |

அடைடயாளப்படுத்தப்பட்ட 30 விழுமியப் பண்புகைள மாணவர்களது பாடசாலை, குடும்பச் சூழலில் அவதானித்தும், பெற்றோரையும் குடும்ப அங்கத்தவர்களையும் பேட்டி கண்டவைகயிலும் மாணவர்களின் நடத்தை வெளிப்பாடுகளில்,இரண்டு அரச பாடசாலை மாணவர்களினதும் அடைவு மட்டம் தனியார் முன்னோடிப் பாடசாலையின் அடைவு மட்டத்தைவிட குறைவாக இருப்பதனையே பின்வரும் வரைபு(04) காண்பிக்கின்றது.




வரைபு – 04

**கண்டுபிடிப்புக்கள்:**

அரச பாடசாலை, மாதிரித் தனியார் பாடசாலை மாணவர்களின் விழுமிய வெளிப்பாடுகளில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளில் பின்வரும் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

- பாசாலைகள் அரச கல்வித் திட்டத்திற்குள் வரையறுக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் மாதிரித் தனியார் பாடசாலை அரச கல்விக் கொள்கைகளுடன் இணைத்துவிழுமியக் கல்விக் கொள்கைகளுக்கும் சமமுக்கியத்துவம் வழங்குகின்றது.
- அரச கல்விக் கொள்கைககளும், பெற்றோரின் இலக்குகளும் தொழிற் கல்வியினை இலக்காகக் கொண்டுள்ளது.ஆனால் மாதிரிப் பாடசாலையின் கல்விக் கொள்கைகளும், பெற்றோர் இலக்குகளும் விழுமியங்களுடன் இணைந்த சமூக உறுப்பினரை உருவாக்குவதாக உள்ளது.
- அரச பாடசாலைகளில் விழுமியம்சார் விடயங்கள் வரையறுக்கப்பட்ட பாடவேளையில் போதனையாக இடம்பெறுகின்றன. அதேவேளை மாதிரிப் பாடசாலையில் பாடபோதனைகளுடன் இணைந்து விழுமியங்கள் நாளாந்தம் நடைமுறையாகவும் பயிற்றுவிக்கப்படுகின்றன.
- அரச பாடசாலைகளில் விழுமியச் செயற்பாடுகள் அச்சூழலில் மாத்திரம் கண்காணிக்கப்படுகின்றது. அதே நேரம் மாதிரிப் பாடசாலையில் பாடசாலைச் சூழலிலும், வீட்டுச் சூழலிலும்மாணவர்கள் கண்காணிக்கப்படுகின்றனர்.
- துனியார்பாடசாலைகளால் பெற்றோர்கள் ஆரம்பம் முதல் தொடர்தேர்ச்சியாக விழிப்பூட்டப்படுகின்றனர்.
- புாடசாலை ஆசிரியர்கள்அடிப்படையில் கல்விமயப்படுத்தப்பட்ட ஆழுமையுடையவர்களாக உள்ளனர். மாதிரிப் பாடசாலை ஆசிரியர்கள் கல்வியுடன் இணைந்து விழுமியங்களை வெளிப்படுத்துவதும் ஆழமையுடன் தொழிற்படுகின்றனர்.

**விதந்துரைப்புக்கள் :**

- ✓ பாடசாலைக் கல்விக் கொள்கைகளில் விழுமியம்சார் செயற்திட்டங்கள் மேலும் இணைத்துக்கொள்ளப்படுவதற்கான முயற்சிகள் பாடசாலைகளால் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- ✓ நாளாந்தம் பாடசாலையில் நடைமுறையாக அவை பயிறறுவிக்கப்பட வேண்டும்.
- ✓ பாடசாலைகள் ஆசிரியர்கள் விழுமியச் செயற்பாடுகளை வெளிப்படுத்தும் முதல் நிலை முகவராகத் தெழிற்படும் சூழலை உருவாக்க வேண்டும்.

- ✓ மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை,பேற்றோர் இலக்குகள் மீளமைக்கப்படல் வேண்டும்.
- ✓ வீட்டுச்சூழலிலை விழுமியம்சார் நடைமுறைகளை அமுல்படுத்த உதவும் அலகாக உருவாக்க விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் பெற்றோருக்கு வழங்க வேண்டும்.

## முடிவுரை:

சமூகத்தில் அருகிச் செல்லும் விழுமிய நடத்தைகளை விருத்திசெய்வதில் அரச,தனியார் பாடசாலைகள் கூடிய கவனம் செலுத்தி வருகின்றன. எனினும் மாதிரித் தனியார் பாடசாலையின் விழுமியம்சார் செயற்திட்டங்கள் சமூகத்தில் உச்ச அடைவை மாணவர்களிடையே ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. எனவே பாடசாலைகளின் செயற்திட்டங்கள் விழுமியம்சார் இலக்குடன் பயணிக்கும்போது எதிர்காலத்தில் சிறந்த சமூகம் ஒன்றைக் கட்டி எழுப்ப முடியும்.

## உசாத்துணைகள்:


1. பாலசூரிய, ஏ.எஸ். (1999) , " விழுமியக் கல்வி'', தேசிய கல்வி நிறுவகம், கொழும்பு.
2. றவூப் ஸெயின் ,(2011) , "குழந்தை உளவியல்'', அபிவிருத்திக் கற்கைகள் நிலையம், கொழும்பு.
3. Cubas Berraggan , P. (2008), " Happiness and Education in Value based Education" ,Mexico.
4. Fyffe, L.R. (2006) An Investigation of Primary School Children with High and Low Values ,Scores and the Development of and Instrument to Measure Childrenís Values,Faculty of Education, Griffith University.
5. Kishore Lalith (1990) , " value oriental Education", Doaba House, Delhi.
6. Kohlberg, L. (1963) , " The development oriented towards a moral order, free press, New York.
7. Lovat.T, Toomey,R., Dally .K, & Clemnt ,(2009) ," Impact of value Education", Department of Education, University of New Castle.